[10th August 1965

Stage II	Preparation and publication of final statements.	Group I Group II	31st August 1965. 31st December 1965.
Stage III	Publication of notification under section 18 and taking possession of surplus lands.	Group I Group II	31st December 1965. 31st March 1966.

So, all these stages will be over sometime in the middle of next year.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : நில உச்சவரம்புச் சட்டம் 1959-ல் நிறைவேற்றப்பட்டது என்று நினைக்கிறேன். ஆனால் அதை அறிமுகப்படுத்தியது 1959-க்கு முன்பு. நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டு வருவதாக முன்பே அறிமுகப்படுத்திய காரணத்தினால் எல்லா நிலங்களையும், உச்ச வரம்பிற்கு இடைஞ்சலாக இருந்ததைப் பல பிரிவுகளாக பிரித்துக் கொண்டார்கள். ஆகவே, அறிமுகப்படுத்திய தேதியில் இருந்து இதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வார்களா அல்லது சட்டம் உருவான பிறகு இருந்துதான் எடுத்துக் கொள்வார்களா?

கனம் திரு. வெ. ராமையா : எப்படிப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதைப்பற்றி இந்தச் சபை பரிசீலனை செய்து முடிவு செய்து சட்டமாக்கியிருக்கிறது. அந்த விவரங்களைப் பார்த்தால் எல்லாம் தெரியும்.

திரு. ம. கமலநாதன் : நமது மாநிலத்தில் உச்சவரம்புச் சட்டத்தினால் மிச்ச நிலம் எவ்வளவு வரும் என்பதற்கு ஏதாவது இலக்கு இருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : சற்று முன்பு அளித்த பதிலைப் பார்த்தால் தெரியும் பல கட்டங்கள் முடிந்த பிறகுதான் தெரியும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ப்ரிலிமினரி நோட்டிபிகேஷன் முடித்து விட்ட பகுதிகளில் மட்டும் எவ்வளவு எக்கர் நிலம் அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது ?

கனம் திரு. வெ. ராமையா : அந்த விவரம் இப்போது என்னிடம் இல்லை.

மதுரையில் உள்ள அரசாங்க அலுவலகங்கள்

* 187 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரையில் வெவ்வேறு இடங்களில் உள்ள அலுவலகங்களை ஒரே இடத்தில் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

10th August 1965]

கனம் திரு. வெ. ராமையா : (அ) ஆம்.

(இ) அரசாங்கத்தின் கவனத்தில் உள்ளது.

திரு. வை. சங்கரன் : குறிப்பாக கமர்ஷியல் டாக்ஸஸ் ஆபிஸ்கள் ஏழெட்டு சர்க்கிள்களில் பல பகுதிகளில் அமைந்திருப்பதால் வியாபாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் அதனுல் துன்பம் ஏற்படுவதால் உடனடியாக கமர்ஷியல் டாக்ஸஸ் ஆபீஸ்களை சென்ட்ரல் இன்கம் டாக்ஸ் ஆபிசை அமைத்திருப்பதுபோல் ஒரே கட்டடத்தில் அமைக்க உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க உத்தேசிக்கப் படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : அந்த நகரில் உள்ள பொதுவான நிலைக்கு விவரம் சொன்னேன். இந்தக் குறிப்பிட்ட கேள்விக்கு விவரம் வேண்டுமானுல் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

பெரியம்மை நோயால் பாதிக்கப்பட்டவர்கள்

* 188 கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-65-ல் நமது மாநிலத்தில் வைசூரி (பெரியம்மை) நோயினுல் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர், மாவட்டவாரியாக ?

(இ) எத்தனை பேர்களுக்கு தடுப்பு முறை கையாளப்பட்டது, மாவட்டவாரியாக ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) சபைமுன் ஒரு விவர அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : பாதிக்கப்பட்டவர்கள் என்ற இடத்தில் கூறப்பட்டிருப்பது அம்மை நோய் கண்டவர்கள் என்றுதான் அர்த்தமா ? அல்லது இறந்தவர்கள் என்று அர்த்தமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அம்மை நோய் கண்டவர்கள் என்றுதான் அர்த்தம்.

Division of the State into two Health Zones

* 189 *Q.*—Sri V. S. S. MANI : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to divide the State into two Health Zones for the purpose of transfer of staff in the offices of District Health Officers?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இல்லை.

---

[a] 710-ம் பக்கத்தில் IV-ஆம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.